27591

# கனகரஞ்சித் ஒப்பாரி



A. பாபு அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

(9287)
அன்பளிப்பு
MADRAS-90

உ

ஸ்ரீவேலு மயிலுந் துணை.

# கலியுக பூவைமார் கதறிப் புலம்பும்

# கனகரஞ்சித ஒப்பாரி

## குறட்பா.

கற்றறிவோன் வறைந்த கனகரஞ்சித ஒப்பாரி
மற்றவர் வரைய பெயர் மாடு.

## புருஷனுக்குப் புலம்பல்

கம்பிவளவளச்சி என்சாமிதுரை ராஜாவே என்
கடலோரங் தொட்டிகட்டி அந்த
கடலோரம் தொட்டியிலே காசாம்புமெத்தையிலே நான்
கன்னிபடுத்தேனென்று என்னுட

கர்னனுள்ள நாளையிலே எனக்கு ஒரு
கரப்புலேட்டெறியும் ஒரு
கடகாந்தம் பக்கெறியும் என்னுட

கர்னனுள்ள நாளையிலே நான்
கரப்பு லேட்டிழுந்தேன் ஒரு
கடகாந்தம் பக்கிழுந்தேன்.

பொன்னுவளவளச்சி என்சாமிதுரை ராஜாவே நான்
பூவாரம் தொட்டிகட்டி அந்த
பூவாரம் தொட்டியிலே பூலாம்புமெத்தையிலே நான்

போத்தி படுத்தேனென்று — என்னுட
புண்ணியருள்ள நாளையிலே — எனக்கு ஒரு
பொன்னு லயிட்டெறியும் — ஒரு
புதுக்காந்தம் பக்கெரியும் — என்னுட
புண்ணியற்கு காலமிங்கே — நான்
பொன்னு லயிட்டிழுந்தேன் — ஒரு
புதுக்காந்தம் பக்கிழுந்தேன்.

தங்கா வளவளச்சி — என்சாமிதுரை ராஜாவே நான்
தாவாரம் தொட்டிகட்டி — அந்த
தாவாரம் தொட்டியிலே — தாழம்பூமெத்தையிலே நான்
தங்கா படுத்தேனென்று — எனக்கு ஒரு
தங்க லைட்டெறியும் — ஒரு
தனிகாந்தம் பக்கெறியும் — என்னுட
தருமருக்கு காலமிங்கே — நான்
தங்க லைட்டிழுந்தேன் — ஒரு தனிகாந்தம் பக்கிழுந்தேன்

சித்திரைமாதத்திலே — என்சாமிதுரை ராஜாவே அங்கு
சித்திரத்தேரோடையிலே — நான்
செல்வகிளி வாய்திறந்து — நான்
சேலைமேலாசையின்னேன் — அப்போ
சேலைக்கைந்நூறு — என்னுட
சிறுநகைக்கு முன்னூறு — அந்த
சேலைமடிச்சுடுத்தி — ஒரு
சிறுநகையு மேலணிந்து — நான்
ஸ்ரீரங்கம் பழணமின்ன — அந்த
ஸ்ரீரங்கத்துத் தேவடியாள் — என்னுடைய
சேலைகுறைச்ச வென்றாள் — ஒரு
சிறுநகையும் கம்மியென்றாள் — நான்
அந்தசொல்லைக் கேட்டல்லவோ — என்னுட

சின்ன பிறப்போடு சீராடும்தம்பியோடு நான்
சிந்திவிட்டேன் கண்ணீரை

கார்த்திகை மாதத்திலே என்சாமிதுரை ராஜாவே அந்த
திருவாலூர் தேரோடையிலே அப்போ
கன்னகியாள் வாய்திறந்து நான்
காப்புமேலாசை யென்னேன் அப்போ
காப்புக்கைந்நூறு எனக்கு
கழுத்துநகை முன்னூறு அந்த
காப்புமெருகெடுத்து நான்
கழுத்துநகை மேலணிந்து அப்போ
காஞ்சீபுரம் பழணமென்ன அந்த
காஞ்சிபுரம் தேவடியாள் என்னுட
காப்புகாக்கு தென்பாள் கழுத்துநகை கம்மியென்பாள்

நான் அந்தசொல்லைக் கேட்டல்லவோ என்னுட
சின்ன புறப்போடு சீராடும் தம்பியோடு கான்
சிந்திவிட்டேன் கண்ணீரை.

பங்குனிமாதத்திலே என்சாமிதுரை ராஜாவே நான்
பங்குனித்தேரோடையிலே நான்
பச்சைகிளிவாய்திறந்து என்சாமிதுரை ராஜாவே நான்
பட்டுமேலாசையின்னேன் அப்போ
பட்டுக்கைனூறு என்னுட
பவுனு நகை முன்னூறு நான்
பட்டேமடிச்சுடுத்தி என்சாமிதுரை ராஜாவே அந்த

பவுனுநகை மேலணிந்து நான்
பழனிப்பழணமின்னேன் அந்த
பழனிவூர் தேவடியாள் என்னுட
பட்டேகுறைச்சலென்னுள் அந்த
பவுனுநகை கம்மியின்னுள் நான்
அந்தசொல்லை கேட்டல்லவோ என்
சின்ன பிறப்போடு சீராடுந்தம்பியோடு நான்
சிந்திவிட்டேன் கண்ணீரை.

ஏறும்பொழுதிலே எண்ணைப்பெத்தாளே அம்மாடி அந்த
ஈறமணலும் பாதையிலே என்னே
இருசிமனுஷனுக்கு என்னைப்பெத்தாளே அம்மாடி அந்த
எழுத்தறியா மூடனுக்கு பாவிநான்
இளையதாரமின்னுங்கோ அப்போ
அந்தசொல்லைக் கேட்டல்லவோ என்னைப்பெற்றுளே அம்
அருங்கிளியாள் வாடுறேனே [மாடி நான்
மாலைப்பொழுதிலே என்னைப்பெற்றுளே அம்மாடி அந்த
மலையோரம் சாலையிலே என்னே
பட்டிமனிதனுக்கு என்னைப்பெற்றுளே அம்மாடி
மடபுத்திகாரனுக்கு பாவிநான்
மறுதார மின்னுங்கோ அப்போ
மாதர்சொல்லைக் கேட்டல்லவோ என்னை
பெற்றுளே அம்மாடி நான்
மங்கைப் புலம்பினேன்.

தங்கத்தகட்டுவண்டி என்சாமிதுரை ராஜாவே உனக்கு
தாம்பரத்தால் கூண்டுவண்டி நீ
தாரையிலேபூட்டிவிட்டால் என்சாமிதுரை ராஜாவே அங்கே
தரையும் கிடுகிடின்னும் ஒருதாசிமனம் தாழ்வாகும்

வெள்ளித்தகட்டுவண்டி என்சாமிதுரை ராஜாவே அங்கே
வெங்கலத்தால் கூண்டுவண்டி இந்த
வீதியிலே பூட்டிவிட்டால் என்சாமிதுரை ராஜாவே அந்த
வீதிகிடுகிடின்னும் இந்த வேசிமனம் தாழ்வாகும்
சீமை கடுதாசி என்னைப்பெத்தாளே ஆச்சிகளா இப்போ
சீக்கிரம் வந்திரங்க நான்
ஆருதோ ஓலையின்னு நீபெத்தசெல்வி இங்கு
அலக்ஷியமாய் எண்ணிருந்தேன்

ஓலைச்சுருள் உடைத்து என்னே
பெத்தாளே ஆச்சிகளா இப்போ
உட்கார்ந்து வாசி யின்னேன்
வாசித்து பார்த்துமன்னே அடிபெண்ணே உனக்கு
வாழ்வோலை யல்லவம்மா சாவோலை யின்னுங்கோ

சின்னரயிலேறி என்னைப்பெத்தாளே ஆச்சிகளா அந்த
சிருரயிலு பாசாகி நான்
எசல்லிவர நேரமின்னுள் அடி
என்ஜோடி பெண்டுகளா அங்கே
சவத்தை எடுக்காதிங்கோ ஒரு தனிவிளக்கு வச்சிடுங்கோ
பொன்னுரயிலேறி என்னைபெத்தாளே அம்மாடி அந்த
புதுரயிலு பாசாகி நான்
பெண்ணுவர நோஞ்சென்ருல் அடி
என்ஜோடி பெண்டுகளா அங்கே
பிணத்தை எடுக்காதிங்கோ ஒரு
பொன் விளக்கு வச்சிடுங்கோ

தங்கரயிலேறி என்னைப்பெத்தாளே அம்மாடி இங்கு
தனிரயிலு பாசாகி நான்
தங்கைவர நேரஞ்சென்ஞு என்ஜோடி பெண்டுகளா என்
தாயை எடுக்காதிங்க ஒரு பவர்லைட்டு வச்சிடுங்கோ

சேலைமடுச்சுத்தி என்சாமிதுரைராஜாவே அந்த
சிவனர் கோவிலுக்கு நான்
சீருகொண்டு போனேனுனல் அந்த
சிவன்கோவில் சந்யாசி என்னுட
சேலைகுறைச்ச வின்னுன் சிசுவில்லாப் பாவியின்னுன்

பட்டே மடிச்சுடுத்தி என்
சாமிதுரைராஜாவே அந்த
பார்வதி கோவிலுக்கு நான்
பாலுகொண்டுபோனேனுனல் அங்கே
பார்வதிகோவில் சந்யாசி என்னுட
பட்டை குறைச்சவின்ஞு நான்
பானில்லாப் பாவியின்னுன்

செஞ்சிமலை மேலிருந்து என்னை
பெத்தாளே ஆச்சிகளா நான்
செல்விகுறை சொன்னேனுனல் என்

மஞ்சக்குருவிகளா மயில்குயில் ஆந்தைகளா அந்த
கொஞ்சும்கிளி பெற்றெடுத்த குஞ்சும் திடுக்கிடுமாம்

பழனி மலை மேலிருந்து
என்னைப்பெத்தாளே ஆச்சிகளா நான்
பாவிகுறை சொன்னேனானால் இப்போ
கட்டுகளித்திகளா கம்பிநாட்டிப் பெண்டுகளா
பழனிமலைமேலிருக்கும் இரண்டுபக்ஷி திடுக்கிடுமாம்

கட்டுக்கழுத்திஎல்லாம் என்
சாமிதுரை ராஜாவே அங்கே
கலந்து நீராடையிலே என்னை
கணவனில்லாப் பாவியின்னு
என்சாமிதுரை ராஜாவே அங்கே
கறையொண்டி நில்லுமின்னாள்

ஆற்றங்கரை ஓரத்திலே அடிநானே சதிகாரி ஒரு
அன்னத்தை மேயவிட்டேன் அந்த
ஆறுகரைபுரண்டு அன்ன மிரண்டோட
வீமபுறத்தாரே வில்லம்பு சூரர்களே இப்போ
எமபுறத்தாரே எமனார்விட்ட தூதுவரே நீங்கள்
அம்புதொடுத்துவிட்டீர் நான்
கன்னிப்புலம்புறது எமபுறத்திற்கு சம்மதமா

மோட்டாரின் மீதேரி என்னுடைய மணவாளர் அங்கே
மெட்ருசுக்குப் போரேனென்று எனக்கு
சீட்டுஎழுதிவிட்டார் என்னுடையமணவாளர் ஒரு
சேதிசொல்ல ஆளுவிட்டார்

ஆளுடையகைசீட்டை நானேசதிகாரி ஒரு
அர்ஜண்டா பார்த்துவிட்டு நான்
சாலும்கழுவி இங்குசம்பா சாதம்சமைத்துவைத்தேன்

சுட்டுக்குழம்பு வைத்தேன்
என்னுடைமண வாளருக்கு நான்
குருமா வருவல்வைத்தேன் நான்

சாப்பிட்டுப்போன என் சரசமுள்ள ராஜருக்கு அங்கு
சாவுவந்து சேர்ந்தமெதன்ன

பீர்க்கங்காய் மோர்குழம்பு
என்னுசை மணவாளருக்கு தான்
பிரியமாய் சமைத்து வைத்தேன் இப்போ
பசியாரிப்போன என்னுசை மணவாளருக்கு அங்கு
பழுதுவந்து நேர்ந்ததேன்ன

கத்திரிக்கா சாம்பாரு
என்னசை மணவாளருக்கு நான்
காலெலும்பு சூப்புவைத்தேன் இப்போ
ஆத்தூருப் போலீசே என்னுசை மணவாளருக்கு
ஆபத்து நேர்ந்தமெதன்ன

ஆபத்து காலத்திலே போலீசுகாரரே
புதுச்சேரி மைனீரே ஒரு
ஆஞவிட்டா லாகதோ இப்போ
பாப்பாத்தி பெற்றபெண்ணு அடி நானேசதிகாரி இங்கே
புலம்பித் தவிக்கிறேனே

போலீசுக்காரரே ஒரு
பொய்சொல்லா வாசகரே இப்போ
தாஸிலு அய்யாவே என் ஆசை மணவாளருக்கு அங்கு
தலைபோன மாயமென்ன நீங்கதலைபோன நேரத்துக்கு ஒரு
கோரட்டு அய்யாவே ஒரு தந்திதந்தா லாகாதோ
பெண்ணாள் புலம்புறது என்கோர்ட்டு அய்யாவே அந்த
கும்புனிச் சேவகரே நான்

பெண்ணாள் புலம்புறது இங்கே
புலியோருக்கு சம்மதமா
வேஷ்டி விழுத்துகட்டி என்
கூடப்பிறந்த தம்பிகளா நீங்கள்
வேசிவீட்டில் போயிருந்தீர் அந்த

வேசிவைத்த கைமருந்து
வெந்துதோ பொங்கியிலே அந்த
வேசியை மறப்பதெப்போ என்
கூடப்பிறந்த தம்பிகளா நம்ப
வீடுவந்து சேர்வதெப்போ

தாழும்பு வேஷ்டி கட்டி
என்கூடப்பிறந்த தம்பிகளா நீங்கள்
தாசிவைத்த போயிருந்தீர் அந்த
தாசிவைத்த கைமருந்து உனக்கு
தங்குச்சா பொக்கியிலே அந்த
தாசியை மறப்பதெப்போ என்
கூடப்பிறந்த தம்பிகளா நம்ப
தாவு வந்து சேர்வதெப்போ

ஒக்கப்பிறக்கலியோ என்
ஜோடிப் பெண்டுகளா பாவிநான்
ஒருமித்து வாழலியோ நம்போ
சேரப்பிறக்கலியோ நாம் சரியொத்து வாழலியே

மாலைச்சரடிழுந்தேன் என்ஜோடி பெண்களா நான்
மைசாந்து பொட்டிழுந்தேன் இப்போ
காலை குளி யிழுந்தேன் என்ஜோடி பெண்டுகளா நான்
கஸ்தூரி பொட்டிழுந்தேன்
எண்ணிப்புலம்புகிறேன் அடி என்ஜோடி பெண்டுகளா என்
கன்னிகுறை தீர்வதெப்போ

சிறுமிழுந்தேன் அடிஎன்ஜோடி பெண்டுகளா நான்
சிருநகையும் தானிழுந்தேன் இப்போ
கன்னிவசந்தாபாய் செய்த கனகாஞ்சித ஒப்பாரி இப்போ
மங்கை நீங்கள் பாடி உங்கள்
மனக்குறையைத் தீர்த்திடுங்கோ

முற்றிற்று.

---

V. Press, Madras.

**வில்லிபாரத வசனம்** அல்லது
**மகா பாரத வசன சங்கிரகம்** விலை ரூ. 3

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

பாரதம் ஆதிமுதல் அந்தம் வரையில் இடையில் எவ்வித உபகதையும் விடாமல் படிக்கத் தெள்ளிய தமிழ் வசன நடையில் தமிழ்ப் பண்டிதரும், 'கம்ப நாடர்' ஆசிரியருமான மோ. வே. கோவிந்தராஜ அய்யங்காரவர்களால் புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது. அநேக அழகிய ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு நூதன முறையில் வெகு அழகான காலிகோ கட்டடம் செய்யப்பட்டிருக்கிறது. வாசகசாலைக்கும், பரிசளிப்பதற்கும் இன்றியமையாதது.

**பிரபஞ்ச விநோதக் கதைகள்** விலை ரூ. 1

படிக்கப் படிக்க இனிமை அளிப்பது. இப்பிரபஞ்சத்தில் நடக்கும் அதி விநோதமான செய்கைகள் பலவும் விளக்கப்பட்டிருப்பது. அதி உன்னதப்போக்கு. அழகிய கதைகள்.

இதில் அடங்கியுள்ள கதைகளாவன:—

1. பந்தயத்தால் மனைவியை இழந்தது 2. பெண்ணால் மோசம்போன சாஸ்திரி 3. முகஸ்துதியால் ஏமாந்த கோடீசுவரன் 4. ஐந்து சகோதரிகளின் தந்திரம் 5. மூன்று காதலர் காதலிகளின் பரிதாபம் 6. வஞ்சகன் வலையில் மடமான் 7. ஒரு காதல் கலியாணத்தின் நேர்மை 8. காதல் வேட்டை 9. செல்வியின் தந்திரம் 10. காமுகனுக்குப் படிப்பினை.

தமிழ் புத்தகங்கள் முற்றுமடங்கிய விலை விவர ஜாபிதா வேண்டுபவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி,
நெ. 4, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி., சென்னை.

227